## சுருக்கம்

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை – இத்துறையின் கீழ் உள்ள தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் மாற்றுத் திறனாளிகளுக்கான கல்வி நிறுவனங்களில் பணியாற்றும் உடற்பயிற்சி பயிற்றுநர் மற்றும் சிறப்பு கல்வியாளர்களுக்கு மாதந்திர மதிப்பூதியம் ரூ.14,000/-லிருந்து ரூ.18,000/-ஆக உயர்த்தி வழங்குதல் – ஆணை - வெளியிடப்படுகிறது.

---

### மாற்றுத் திறனாளிகள் நல (மா.தி.ந-1)த் துறை

அரசாணை (நிலை) எண்.7

நாள்: 18 .05.2022
சுபகிருது, வைகாசி– 4
திருவள்ளுவர் ஆண்டு, 2053.

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண் 36, மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை, நாள் 03.10.2018.
2. மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநரின் கடித ந.க. எண் 4332/சி.ப.2/2021, நாள் 18.03.2022.

-----

ஆணை:

2022-2023ஆம் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், இன்னபிறவற்றுடன் இத்துறை குறித்தான கீழ்காணும் அறிவிப்புகள் வெளியிடப்பட்டது:-

"தரமான ஆரம்ப நிலை பயிற்சி மற்றும் கல்வியை வழங்குவதற்காக, தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் மாற்றுத் திறனாளிகளுக்கான கல்வி நிறுவனங்களுக்கு அரசு சம்பள மானியம் வழங்கி வருகிறது. இந்நிறுவனங்களில் பணியாற்றும் உடற்பயிற்சி பயிற்றுநர் மற்றும் சிறப்பு கல்வியாளர்களுக்கு வழங்கப்படும் மாத மதிப்பூதியம் 14,000/- ரூபாயிலிருந்து 18,000/- ரூபாயாக உயர்த்தப்படும்".

2. மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், மனவளர்ச்சி குன்றியோர் பார்வைத் திறன் மற்றும் செவித்திறன் குறையுடையோருக்காக செயல்படும் தன்னர்வ தொண்டு நிறுவனங்களில் பணிபுரியும் சிறப்பாசிரியர்கள் மற்றும் தசைப் பயிற்சியாளர்களின் மதிப்பூதியம் ரூ.10,000/-விருந்து ரூ.14,000/- ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.

(த.பி.பா.)

3. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநரின் கடிதத்தில், 2022-2023ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட இத்துறை சார்ந்த அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக இத்துறையின் கீழ் இயங்கும் அரசு அங்கீகாரம் பெற்ற தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் மனவளர்ச்சி குன்றியோர், செவித்திறன் குறையுடையோர், பார்வைத்திறன் குறையுடையோர் கை, கால் பாதிக்கப்பட்டோர் ஆகியோருக்கான சிறப்புப் பள்ளிகள் மற்றும் ஆரம்ப நிலைப் பயற்சி மையங்களில் 1294 சிறப்பு கல்வியாளர்கள் மற்றும் தசைப் பயிற்சியாளர்கள் கீழ்கண்டவாறு பணிபுரிவதாகவும் அவர்களது மதிப்பூதியத்தை ரூ.14,000/-லிருந்து ரூ.18,000/-ஆக உயர்த்தி வழங்குவதால் அரசுக்கு ரூ.6,21,12,000/- கூடுதல் செலவினம் ஏற்படும் என்றும் இதற்கான உரிய ஆணையினை வழங்குமாறும் அரசினை கேட்டுக்கொண்டுள்ளார்:-

| வ. எண் | சிறப்பாசிரியர்களுக்கு ஊதிய மானியம் வழங்கும் திட்டம் | சிறப்பாசிரியர்கள் மற்றும் தசைப் பயிற்சியாளரின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்புப் பள்ளிகள் | 783 |
| 2. | பார்வைத் திறன் குறையுடையோருக்கான சிறப்புப் பள்ளிகள் | 21 |
| 3. | செவித்திறன் குறையுடையோருக்கான சிறப்புப் பள்ளிகள் | 110 |
| 4. | மனவளர்ச்சி குன்றியோருக்கான ஆரம்பநிலை பயிற்சி மையம் | 155 |
| 5. | பார்வைத் திறன் குறையுடையோருக்கான ஆரம்ப நிலை பயிற்சி மையம் | 12 |
| 6. | செவித்திறன் குறையுடையோருக்கான ஆரம்நிலை பயிற்சி மையம் | 63 |
| 7. | ஆட்டிசம் குறையுடையோருக்கான ஆரம்பநிலை பயிற்சி மையம் | 80 |
| 8. | மனவளர்ச்சி குன்றியோருக்கான பகல்நேர பயற்சி மையம் | 6 |
| 9. | மஸ்குலர் டிஸ்ட்ரோபி குன்றியோருக்கான பகல்நேர பயிற்சி மையம் | 43 |

| | | |
|---|---|---|
| 10. | மாநில வள மற்றும் பயிற்சி மையம், சென்னை. | 8 |
| 11. | மண்டல வள மற்றும் பயிற்சி மையம், திருச்சி. | 7 |
| 12. | ARVI மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்புப் பள்ளி, தேனி. | 3 |
| 13. | ஓயாசிஸ் மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்புப் பள்ளி, காட்டுமன்னார்கோவில், கடலூர் | 3 |

4. மேற்காணும் நிலையில், 2022-2023ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் வெளியிடப்பட்ட அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக, மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநரின் கருத்துருவினை நன்கு பரிசீலனை செய்த அரசு, இத்துறையின் கீழ் இயங்கும் அரசு அங்கீகாரம் பெற்ற தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் மனவளர்ச்சி குன்றியோர், செவித்திறன் குறையுடையோர், பார்வைத்திறன் குறையுடையோர் கை, கால் பாதிக்கப்பட்டோர்களுக்காக செயல்படும் சிறப்புப் பள்ளிகள் மற்றும் ஆரம்ப நிலைப் பயற்சி மையங்களில் பணியாற்றும் 1294 சிறப்பாசிரியர்கள் மற்றும் தசைப் பயிற்சியாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டுவரும் மதிப்பூதியத்தை ரூ.14,000/-த்திலிருந்து ரூ.18,000/-ஆக உயர்த்தி வழங்கவும், இக்கூடுதல் தொடர் செலவினத்தை, 2022-2023ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட நிதியொதுக்கத்திற்குள் மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநருக்கு அனுமதியளித்து ஆணையிடப்படுகிறது.

5. மேலே பத்தி-4ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

| Sl. No. | Head of Account |
|---|---|
| 1. | 2235-Social Security and Welfare-02 – Social Welfare-101 Welfare of Differently Abled Persons – State's Expenditure-CI Starting of Early Intervention Centres for infants and young children with hearing impairment-309 Grants-in-Aid – 03 Grants for Specific Schemes.<br>IFHRMS [D.P. Code 2235-02-101-CI-30903] |
| 2. | 2235-Social Security and Welfare-02 – Social Welfare-101 Welfare of Differently Abled Persons – State's Expenditure-MG Assistance to reputed NGO's for Special Institutions for Mentally Retarded-309 Grants-in-Aid-01 Grants for Current Expenditure.<br>IFHRMS [D.P. Code 2235-02-101-MG-30901] |
| 3. | 2235-Social Security and Welfare-02 – Social Welfare-101 Welfare of Differently Abled Persons – State's Expenditure-MS Setting up of Early Intervention Centres for the Visually Handicapped children below 6 years – 309 Grants-in-Aid-03 Grants for Specific Schemes.<br>IFHRMS [D.P. Code 2235-02-101-MS-30903] |
| 4. | 2235-Social Security and Welfare-02 – Social Welfare-101 Welfare of Differently Abled Persons – State's Expenditure-DE State Resource cum Training Centre-309 Grants-in-Aid-03 Grants for Specific Schemes.<br>IFHRMS [D.P. Code 2235-02-101-DE-30903] |

| | |
|---|---|
| 5. | 2235-Social Security and Welfare-02 – Social Welfare-101 Welfare of Differently Abled Persons – State's Expenditure-MX Assistance to NGO's for Special Institution for Children with Autism-309 Grants-in-Aid-03 Grants for Specific Schemes.<br>IFHRMS [D.P. Code 2235-02-101-MX-30903] |
| 6. | 2235-Social Security and Welfare-02 – Social Welfare-101 Welfare of Differently Abled Persons – State's Expenditure-CZ Assistance for starting of Day care centres for Mentally Retarded Children in Theni District through Non Government Organisations-309 Grants-in-Aid-03 Grants for Specific Schemes.<br>IFHRMS [D.P. Code 2235-02-101-CZ-30903] |
| 7. | 2235-Social Security and Welfare-02 – Social Welfare-101 Welfare of Differently Abled Persons – State's Expenditure-CF Assistance to Non-Government Organisations for Schools for mentally retarded children-309 – Grants-in-Aid-03 – Grants for specific Schemes.<br>IFHRMS [D.P. Code 2235-02-101-CF-30903] |
| 8. | 2235-Social Security and Welfare-02 – Social Welfare-101 Welfare of Differently Abled Persons – State's Expenditure-MR Establishment of Day Care Centres for the persons affected with Muscular Dystrophy-309 – Grants-in-Aid-01 Grants for Current Expenditure.<br>IFHRMS [D.P. Code 2235-02-101-MR-30901] |
| 9. | 2235-Social Security and Welfare-02 – Social Welfare-101 Welfare of Differently Abled Persons – State's Expenditure-AR Schools for the Deaf-309 – Grants-in-Aid-03 – Grants for Specific Schemes.<br>IFHRMS [D.P. Code 2235-02-101-AR-30903] |
| 10. | 2235-Social Security and Welfare-02 – Social Welfare-101 Welfare of Differently Abled Persons – State's Expenditure-AA School for the Blind-309 – Grants-in-Aid-03 – Grants for Specific Schemes.<br>IFHRMS [D.P. Code 2235-02-101-AA-30903] |

6. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சாரா எண் 24074/நிதி(சந)/2022, நாள் 18.05.2022-இன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஆர். லால்வேனா,**
**அரசு செயலாளர்.**

பெறுநர்
மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர், சென்னை-5.
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள்.
மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர், சென்னை-5. (வழி)
மாநிலக் கணக்காயர், சென்னை-18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-35.
மாநில கணக்காயர் சென்னை-18.

நகல்:
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9
செயலரின் முதுநிலை முதன்மை தனிச் செயலர்,
மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, சென்னை-9.

[த.பி.பா.]

நிதித் (சநு)துறை, சென்னை-9.
திட்டம் வளர்ச்சி (ம) சிறப்பு முயற்சிகள் துறை, சென்னை-9.
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

18/5/22
பிரிவு அலுவலர்
18/5/22